அத்தியாயம் 17

" இது தான் எங்க வீடு., பிடிச்சிருக்கா?" என்று ஆவலுடன் கேட்ட வருணை பார்த்து மெல்லிய சிரிப்பை உதிர்த்த கீதா " ரொம்ப" என்று அமைதியாக கூறினாள்.,

காரை விட்டு இறங்கியவன் கீதாவுக்கு கதவை திறந்து விட அவள் அந்த வீட்டை பார்த்தபடியே இறங்கினாள். அவளை பார்த்து புன்னகைத்தவாறு அவளின் கைகளுடன் தன் கையை கோர்த்தவன் அவளை வீட்டுக்குள் அழைத்து சென்றான்,

நடு ஹாலில் உட்கார்ந்து ஜேசியுடன் அரட்டை அடித்து கொண்டிருந்த மீனாட்சி திடீரென்று பேரன் ஒரு பெண்ணின் கையை பிடித்து கொண்டு வீட்டுக்கு அழைத்து வந்ததை கண்டு ஒரு நிமிடம் அதிர்ச்சியுடன் இருக்கையை விட்டு எழுந்தார்.

கீதா வருணின் காதில் " வருண்! ஆச்சி ஏன் ஷாக் ஆகுறாங்க??" என்று மெதுவாக கேட்க ஜேசி கண்ணை உருட்டி அவர்களின் கைகள் கோர்த்திருப்பதை சுட்டிக் காட்டினான்.

அவள் கையை விலக்க முயற்சிக்க இறுக்கமாக பற்றி கொண்ட வருண் " லோகேஷ்! நீ செங்கோட்டை சிவன் சன்னதிக்கு கார் கொண்டு போ., கீத்துவோட அம்மா அப்பா அப்றம் அவ ஃபேமிலி மெம்பர்ஸ் எல்லாரையும் இங்க கூட்டிட்டு வா! " என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டு நேராக அவனது ஆச்சியிடம் சென்றவன் " எங்கள ஆசிர்வாதம் பண்ணுங்க ஆச்சி" என்று காலில் விழ இருவரின் கைகள் கோர்த்திருந்ததால் கீதாவும் அவனை தொடர்ந்து விழுந்தாள்.

அவர் " நல்லா இருங்க ரெண்டு பேரும்" என்று சொல்லி அவர்களை எழுப்பிவிட்டார். மீனாட்சிக்கு ஏற்கெனவே வருண் ஒரு பெண்ணை விரும்புவதாக தனது மருமகள் கூறியது நினைவில் வந்தது.

அனுவும் வீட்டுக்கு வந்ததிலிருந்து கீதாவை பற்றி ஒவ்வொரு விஷயமாக கூறியதில் அவரும் அவளை சந்திக்க தான் காத்திருந்தார். ஆனால் பேரன் இப்படி திடீரென்று அழைத்து வந்து ஆசிர்வாதம் வாங்குவான் என்று அவர் எண்ணவில்லை.

அங்கு குழுமியிருந்த கீதாவின் நண்பர்களிலிருந்து வருணின் குடும்பத்தார் வரை அனைவரும் சிலை போல் சமைந்து விட்டிருந்தனர் அவனின் செயலால்.

கீதா வருணின் காதை கடித்தாள். " வருண்! நீ என்ன பண்ண போற?? இப்போ எதுக்கு ஆச்சி கிட்ட ஆசிர்வாதம் வாங்குன?"

" நம்ம ஹனிமூன் போகப் போறோம். அதுக்கு தான்"

" வாட்?? சீரியசா பேசு வருண்."

" ஓ., சீரியஸாவா! அப்போ நம்ம கல்யாணத்துக்கு பெர்மிஷன் கேக்க ., இது ஓகே வா??"

" நான் இன்னும் உனக்கு ஓகே சொல்லவே இல்ல"

" சாரி மிஸ். கீதா கிருஷ்ணமூர்த்தி., உனக்கு குடுத்த டைம் எப்போவோ முடிஞ்சு போச்சு., இதுக்கு மேல உனக்கு டைம் குடுத்தா நமக்கு ஸ்ட்ரைட்டா அறுபதாம் கல்யாணம் தான் நடக்கும்"

" அப்பிடிலாம் இல்ல., இன்னும் கொஞ்சம் நாள்...:

" இன்னும் கொஞ்சம் நாள் கழிச்சு நான் கேட்டாலும் நீ இதே பதில் தான் சொல்ல போற. ஸோ நோ மோர் ஆர்கியுமெண்ட்ஸ்"

" வருண் நான் இன்னும் அபிம்மா கிட்ட சொல்லவே இல்லடா"

" அத நான் சொல்றேன் செல்லம். யூ டோண்ட் வொர்ரி"

" அடம் பிடிக்காத வருண்"

" உன்ன விடவா??"

" யூ ஆர் சோ மீன் வருண்"

" அடியே நான் இதுவரைக்கும் உன்ன கிஸ் கூட பண்ணது இல்லடி. என்ன போய் மோசம்னு சொல்ற "

" உனக்கு கிஸ் வேற கேக்குதா?"

" குடுத்தா நல்லா இருக்கும்"

" என் பொறுமைய ரொம்ப சோதிக்குற லொடலொடா"

" அஹான்! இன்னும் கொஞ்சம் நேரம்., என்னொட மாமியார் அண்ட் மாமனார் வரட்டும்"

" எனக்கு வர்ர கோவத்துக்கு உன்ன அப்பிடியே"

" என்ன பண்ண போற??? நான் சொல்லுற பணிஷ்மெண்ட் குடு. டைட்டா ஒரு ஹக் அண்ட் மைல்டா ஒரு கிஸ். பனிஷ்மெண்ட் ஓகே வா??"

" செருப்பு" என்று கோபமாக கூறினாள் கீதா.

" அத நீயே வச்சுக்கோ டியர்" என்று கண்ணை சிமிட்டி விட்டு அதே நேரத்தில் அவள் கையையும் விடாமல் சிரித்து கொண்டே சென்று நண்பர்கள் குழுவுடன் சேர்ந்து அமர்ந்து கொண்டான்.

" கீத்து செல்லம்., இப்போ மச்சான் ஏதோ சொன்னதுக்கு உன்னோட முகம் சிவந்துச்சே., என்ன சொன்னான்" இது அவினாஷ்.

" அண்ணி! நம்மகுள்ள நோ சீக்ரேட்ஸ். சொல்லு ப்ளீஸ்" என்று ப்ரியாவும் ஆவலுடன் கேட்டாள்.

அவர்களின் கேள்விக்கு பதிலளிக்காமல் விழித்த கீதாவை பார்த்த வருண் "கீத்து நான் வேணா சொல்லட்டுமா?" என்று குறும்புடன் கேட்க அவள் கூடாது என்று கண்ணாலே பதிலளித்தாள்.

வருண் அதை கண்டு கொள்ளாமல் " நான் கீத்து கிட்ட கி.." என்று அவன் சொல்லும் முன் அவன் வாயை மூடியவள் " சொன்னா நீ செத்த வருண்" என்று மிரட்டினாள்.

" அப்போ ஏதோ இன்ட்ரஸ்டிங்கா டாட் சொல்லிருக்கார்., அப்பாலே போ தாய்கிழவி" என்று அவள் கையை வருண் வாயிலிருந்து தட்டி விட்டான் ஜேஸி.

வருண் சொல்ல வரவும் கீதா பாவம் போல் முகத்தை வைத்து கொள்ள வருண் வேறு ஏதோ சொல்லி சமாளித்தான்.

கீதா அழுகையை நிறுத்திவிட்டு சகஜமாக உரையாடியதை பார்த்த பின் தான் ரியா யோகா ஸ்ரீதேவிக்கு நிம்மதியாக இருந்தது. அனைவரும் அரைட்டையடிக்க ஆரம்பிக்க அபிராமியும் கண்ணனும் வேணுகோபாலன் அலமேலுவுடன் அஜயின் காரில் வந்து சேர்ந்தனர்.

அவர்களை வரவேற்ற மீனாட்சியை பார்த்து வணக்கம் சொன்னவர்கள் என்னவென்று கீதாவை பார்க்க வருண் கீதாவுக்கும் தனக்குமான உறவை ஆரம்பம் முதல் விளக்க ஆரம்பித்தான்.

எல்லாவற்றையும் சொல்லி முடித்தவன் " எங்க குடும்பம் ரொம்ப பெருசு கண்ணன் சார். இதுல இருக்கிற ஒவ்வொருத்தரும் என் உயிருக்கு சமம். அதிலயும் நாங்க ஒன்பது பேரும் ரொம்பவே குளோஸ். எல்லாரும் எங்கள கிண்டல் பண்ணுவாங்க. எங்க ஃப்ரெண்ட்ஷிப்லாம் எனக்கும் லோகேஷுக்கும் கல்யாணம் ஆகுறவரைக்கும் தானு. வைஃப் கொழைந்தைங்கனு வந்துட்டா எங்க ஃப்ரெண்ட்ஷிப் காணாம போயிடும்னு சொல்லுவாங்க. நானும் சம் டைம்ஸ் யோசிச்சிருக்கேன் சப்போஸ் எனக்கு வர்ர வைஃப்கு எங்க ஃப்ரெண்ட்ஷிப் பிடிக்காம போய்டுச்சுனா என்ன பண்றதுனு" என்று கூறீனான்.

"அப்போ தான் நான் ஃபேஸ்புக்ல கீதாவ மீட் பண்ணேன். என்னோட எல்லா மெசேஜுக்கும் ஒன் வேர்ட்ல ஆன்சர் பண்ண பொண்ணு என்னோட ஃபேமிலி போட்டோஸ் பாத்துட்டு என் ஃபேமிலிக்காக என்னை ஃப்ரெண்டா ஏத்துக்கிறேனு சொன்னா. அந்த நிமிஷம் என்னை அறியாம நான் அவளை விரும்ப ஆரம்பிச்சேன். இடைல நெறைய பிரச்சனைகள் வந்தாலும் அது எதுக்காகவும் என்னோட ஃபேமிலிய வெறுக்காம அவங்க கூட இருந்த ஃப்ரெண்ட்ஷிப்ப அவ மதிச்சா. எனக்கு அவ செகண்ட் சான்ஸ் குடுத்தது கூட என்னோட கசின்ஸ் சொன்னதால தான். ஒரு குடும்பத்தோட அருமை தெரிஞ்ச என்னொட கீத்து எனக்கு வேணும் சார்" என்று சொலி விட்டு கண்ணனை பார்த்தான்.

" இன்னிக்கு அவ அவங்க தாத்தாவ நெனச்சு அழறப்போ எனக்கு தோனுன விஷயம் இது தான். அவ ஆசைப்படுற அழகான ஒரு குடும்பத்தை அவளுக்கு குடுக்கணும். உங்க பொண்ண உங்களவுக்கு பாத்துக்க முடியுமானு தெரியல. பட் என்னோட கீத்து இல்லாம ஒரு லைஃப் என்னால நெனச்சு கூட பாக்க முடியாது சார். எனக்கு அவளை கல்யாணம் பண்ணி குடுங்க" என்று பணிவாக கேட்டவனின் குரலில் இருந்த கீதாவின் மீதான அளவு கடந்த

காதலை உணர்ந்தவர் புன்னகையுடன் சரியென்று கூறி விட்டு அபிராமியை பார்க்க அவரும் கண்ணாலே சம்மதம் தெரிவித்தார்.

வருணின் அப்பா அம்மாவிற்கு ஏற்கெனவே விஷயம் தெரிந்ததால் அவர்களும் மகிழ்ச்சியுடன் கீதாவை அணைத்து கொண்டனர். கீதா கண்ணீருடன் அவர்களை அணைத்து கொள்ள ராகவின் அன்னை சக்தியும் அவனது சித்தி உமாவும் அவளின் கண்ணீரை துடைத்துவிட்டனர்.

விக்னேசும் அவினாஷும் வருணை கட்டி அணைத்து கொள்ள ஸ்ரீதேவி "கங்கிராட்ஸ் அண்ணா" என்று கை கொடுத்தாள். ஜேஸி அவளை கலாய்ப்பதற்காக " ஸ்ரீகுட்டி டாட் உனக்கு அண்ணானா நீ எனக்கு அத்தையாடி?" என்று கேட்க அவனை அடிக்க துரத்தினாள் ஸ்ரீ.

அனு , பிரியா, ரேவதி., நேத்ரா, ஜானு, மீரா, ரியா யோகா என்று பெண்கள் அனைவரும் கீதாவை சூழ்ந்து கொள்ள லோகேஷ், ஜேசியுடன் சேர்ந்து வருணை கலாய்க்க ஆரம்பித்தனர் அவினாஷும், விக்னேஷும்.

கீதா வருணிடம் வந்து " நீ எனக்காக எவ்ளோ விஷயம் பண்ணிருக்க வருண். நான் சொன்னதுக்காக இவ்ளோ நாள் எனக்காக வெயிட் பண்ணிருக்க. நான் ஓடஞ்சு போனப்போ சாஞ்சுக்க உன்னோட தோளை குடுத்துருக்க. எல்லாம் எனக்காகவா" என்று கண்ணில் கண்ணீருடன் கேட்க அவன் சிரித்து கொண்டே ஆமாம் என்று தலையாட்டினான்.

அவன் சொல்லி முடிக்கவும் அவன் மார்பில் தஞ்சமடைந்தவள் நிமிர்ந்து அவன் முகத்தை பார்த்து " ஐ லவ் யூ வருண்., லவ் யூ சோ மச்" என்று கண்ணில் காதலுடன் உரைக்க அவளை தூக்கிக் கொண்டவன் " ஐ லவ் யூ கீத்து " என்று சொல்லிவிட்டு அவள் முகமெங்கும் முத்தமிட சுற்றி இருந்த நண்பர்கள் " ஓஹோஹோஹோ" என்று ஆனந்த கூச்சலிட்டு அவர்களை வாழ்த்தினர்.

" கீழ இறக்கி விடு" என்றாள் கீதா.

" முடியாது. நான் உன்ன கிட்நாப் பண்னிட்டு போக போறேன்"

" எங்கடா?"

" அது ஒரு அழகான இடம்., உனக்கு ரொம்ப பிடிக்கும்"

" எல்லாரும் சேந்து போவோமா?"

" கீத்து சொன்னதுக்கு அப்றம் நான் செய்யாம இருப்பேனா??ஹலோ கய்ஸ்! நாம எல்லாரும் இப்போ வயலுக்கு போக போறோம்" என்று சொல்லிவிட்டு அவளை இறக்கிவிட்டவன் அவள் கையை மட்டும் விடவேயில்லை.

அனைவரும் அந்த மிதமான வெயில் நேரத்தில் வயலுக்கு வந்து சேர்ந்தனர். ரியாவுக்கும் ஸ்ரீதேவிக்கும் இந்த காட்சிகள் எல்லாம் முதல் முறை பார்ப்பதால் அவர்கள் மொபைலில் வீடியோ எடுத்து கொண்டே வந்தனர்.

அங்கே வயலின் ஒரு பகுதியை டிராக்டர் கொண்டு உழுது கொண்டிருக்க வருண் அந்த டிரைவரிடம் தான் பார்த்து கொள்வதாக கூறி டிராக்டரை விட்டுவிட்டு போகச் சொன்னான்.

அவன் ஏறச் செல்லுகையில் கீதா தானும் வருவதாக கூறவே அவளை சேற்றில் நடக்க விடாமல் தூக்கி சென்று டிராக்டரில் அமரவைத்தவன் தானும் அமர்ந்து ஓட்ட ஆரம்பித்தான். கீதா காண்பித்த இடங்களையெல்லாம் உழுது கொண்டே அவர்கள் அரட்டையை தொடர்ந்தனர்.

அவர்களை கண்ட அவர்களின் நண்பர்கள் அனைவரும் மனதிலேயே கடவுளிடம் இவர்கள் எப்போதும் இதே சந்தோஸத்துடன் இருக்க வேண்டும் என்று வேண்டி கொண்டனர்.

வாழ்க்கை என்பது இன்பமும் துன்பமும் கலந்த அழகான கலவை...ஒரு நாள் இன்பத்தை சுவைத்தவர்கள் இன்னொரு நாள் துன்பத்தையும் சந்தித்தே ஆக வேண்டும்என்ற நியதியை அவர்கள் அப்போது மறந்து விட்டனர்....